# பூம்புகார் ஆழ்கடல்
## அகழ்வைப்பகக் கையேடு



தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
சென்னை

# பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகக் கையேடு

பதிப்பாசிரியர்

முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப.

ஆணையர்

ஆசிரியர்

திரு. கோ. முத்துசாமி

கல்வெட்டாய்வாளர் (பொ)

பூம்புகார்

தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு, சென்னை - 8

2008

முதற்பதிப்பு : 2008

வெளியீட்டு எண் : 203

© தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை

நூலின் பெயர் : பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகக் கையேடு

பொதுப் பதிப்பாசிரியர் :

முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப.

ஆசிரியர் :

திரு. கோ. முத்துசாமி

விலை :

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை - 8.

முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப.
ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.
தொ.பே/நிகரி:91-44-28190023
e-mail : tnarch@tn.nic.in

# பதிப்புரை

பூம்புகார் என்றாலே சிலப்பதிகாரக் கலைக்கூடம்தான் அனைவரது நினைவிற்கும் வரும். நாகை மாவட்டத்தில் பூம்புகார் கலைக்கூடம் தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை ஆகியன சிறந்த சுற்றுலாத் தலங்களாகத் திகழ்கின்றன. பூம்புகார் தற்போது ஒரு கிராமமாக உள்ளது. ஆனால் அதுவே சங்க காலத்தில் முற்காலச் சோழர்களின் தலைநகரமாகவும் உலக அளவில் சிறந்ததொரு துறைமுகப் பட்டினமாகவும் விளங்கி உள்ளது.

அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும் பண்டைய பூம்புகாரின் பெருமையை நமக்கு எடுத்துரைக்கின்றன.

சங்க காலத்தில் பூம்புகார் நாடு நான்கு காத தூரம் அளவு பரப்பில் விரிந்திருந்தது எனவும் அறிகிறோம். ஆனால் அதுவே பிற்கால சோழர் ஆட்சியின் போது நாங்கூர் நாட்டின் ஒரு பகுதி யாக சில காலமும், திருச்சாய் காட்டு சீமையில் சில காலமும் உட்பட்டிருந்ததை கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

தொன்மைப் பூம்புகாரின் வரலாற்றுத் தடயங்களை நில அகழாய்வு மூலம் நடுவண் அரசு தொல்லியல் துறையும், தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையும் பல இடங்களில் ஆய்வு நடத்தி வெளிக் கொண்டு வந்துள்ளன. மேலும் தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை பூம்புகார் ஆழ்கடல் பகுதியில் கோவா தேசிய கடலாய்வு நிறுவனத்தின் உதவியுடன் கடலாய்வும் செய்து பல தடயங்களை வெளிக் கொண்டு வந்துள்ளது.

எனவே (1) நில அகழாய்வு (2) ஆழ்கடலாய்வு இவைகளின் மூலம் கிடைத்த அரிய தொல்லியல் தடயங்களை ஆராய்ச்சியாளர்களும், சுற்றுலாப் பயணிகளும், மாணவர்களும் கண்டு களிக்கும் வண்ணம் பூம்புகாரில் "கடல் ஆய்வு அகழ் வைப்பகம்" அமைக்கப்பட்டுள்ளது. ஆழ்கடலில் ஆய்வு செய்து முதன் முதலில் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் நம் பூம்புகாரில்தான் இப்படியொரு சிறப்புக் காட்சியகம் இயங்கி வருகிறது.

இக்காட்சியகத்தின் சிறப்பு அம்சம், தொல் பொருட்களின் வரலாறு, இடம் பெற்றுள்ள கடல் ஆய்வு பொருட்கள், புகார் பற்றிய பழந்தமிழ் நூல்கள் போன்றன பற்றிய விபரங்களை இத்துறை ஆய்வாளர்கள் திரு. கோ.முத்துசாமி, முனைவர். திருமதி. சீ. வசந்தி, மற்றும் அமரர் கா.நெடுஞ்செழியன் ஆகியோர் பெருமுயற்சியால் சிறு நூலாக வெளியிட்டு உள்ளனர். திரு.மு.த.ஸ்ரீதரன் இதற்கு நிழற்படங்களை நன்கு வடிவமைத்து தந்துள்ளார். அச்சுப் பிரிவினரும் நன்கு பணி ஆற்றியுள்ளனர். அனைவருக்கும் எனது மனமுவந்த பாராட்டுகள்.

க. அருள்மொழி 5.11.2008

முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப.

ஆணையர்

# முன்னுரை

பூம்புகார் சங்க காலச் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுகப் பட்டினமாகவும் சிறந்து விளங்கியுள்ளது. இதற்கு முக்கியமான காரணம் காவிரியாறு சோழ மண்டலத்துள் பாய்ந்து, தனது வற்றாத நீர் வளத்தால் செழிப்படையச் செய்ததுதான். இதனால் இந்நாட்டில் உற்பத்தி பெருகியதால் வெளிநாடு களுடன் வாணிபமும் பெருகியது. எனவேதான் காவிரி ஆற்றின் பெருமையை இளங்கோவடிகள்

"நடந்தாய் வாழி காவேரி"

- என்று புகழ்ந்து கூறியுள்ளார்.

பண்டைய பூம்புகார் நாடு நான்கு காத தூரம் பரப்பில் விரிவடைந்திருந்தது என்பதை

"காதம் நான்கிலும் கடுங்குரலெழுப்பி
பூதம் புடைத்துண்ணும் பூதசதுக்கமும்"

- என சிலம்பு எடுத்துரைக்கிறது.

அதாவது நாற்பது கி.மீ. வரை நான்கு பக்கமும் பூம்புகார் நாடு பார்புகழும் நகரமாக விளங்கியுள்ளது. தொன்மைப் பூம்புகார் நாட்டில் பல இடங்களில் வணிக மையங்கள் இருந்துள்ளன. வெளிநாட்டு வாணிபத்திற்கு கடல் வழியில் காவிரியின் வழியாக படகுகளும் பொருட்கள் ஏற்றிச் சென்று வந்துள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்தில் தொடங்கி காவிரியாற்றின் வடகரையில் மயிலாடுதுறை, கும்பகோணம், திருவையாறு, திருச்சி, கரூர் வரை சாலை வழியும் தொடர்ந்து உள்ளது. அது, "சோழர் கால வணிகப் பெருவழி" என்று அழைக்கப்படுகிறது.

பூம்புகார் நகரில் இரவு பகலாக அங்காடிகள் திறந்து வியாபாரம் செய்யப்பட்டுள்ளது. அவை நாளங்காடி, அல்லங்காடி என்று அழைக்கப்பட்டன. அதுபோல் அங்கிருந்த வணிகப் பகுதி பட்டினப்பாக்கம் என்றும் செல்வந்தர்கள் மாளிகைகளில் வாழ்ந்த இடம் மருவூர்ப்பாக்கம் என்றும் வழங்கப்பட்டன.

பொருட்களின் பெருவணிகம் - பூம்புகார் நாட்டின் உட்கிராமங்களிலும் வணிகக் குழுக்கள் மூலம் நடை பெற்றுள்ளன. இதற்கு (1) மணிக்கிராமம் (2) தலைச்சங்காடு (3) வானகிரி (4) கீழையூர் (5) திருவெண்காடு (6) நாங்கூர் (7) சாய்காடு போன்ற ஊர்கள் இன்றும் தொன்மைச் சான்றுகளுடன் விளங்கி வருவதால் உணர முடிகிறது.

வரலாற்று ஆய்வாளர்களும் தொல்லியல் அறிஞர்களும் பண்டையப் பூம்புகார் நாட்டின் கிழக்குப் பகுதி கடல் கோளால் அழிந்து விட்டதை நூல்களில் குறிப்பிட்டுள்ளார். நமது தொல்லியல் துறையும் ஆழ்கடலில் 6 கி.மீ. தூரம் வரை வடக்கே திருமுல்லைவாயிலில் இருந்து தெற்கே சின்னங்குடி வரை நான்கு கட்டங்களாக ஆய்வு செய்ததில் பல தடயங்கள் கிடைத்துள்ளன. எனவே பண்டையப் பூம்புகாரின் ஒரு பகுதியைக் கடல் கொண்டது உண்மை என்றும் கடலுள் கோயில்கள், அரண்மனை, புத்தவிகாரம், கப்பல் போன்றன மூழ்கியுள்ளன என்பதும் தெரிய வருகிறது.

இவ்வாறு பூம்புகார் பகுதியில் 10 இடங்களில் நில அகழாய்வும் கடல் பகுதியில் 70 அடி ஆழம் வரை ஆழ்கடலாய்வும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நடத்தி பல அரிய தொல்லியல் தடயங்களை வெளிக் கொண்டு வந்துள்ளது. இதனை இந்த வழிகாட்டி நூல் வழியாக அறியலாம்.

இவ்வாறு ஆய்வுகளின் வாயிலாகக் கிடைத்த அரிய தொல்லியல் சான்றுகளை வரலாற்று ஆய்வாளர்களும், பள்ளி, கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் கண்டுகளிக்கும் வண்ணம் பூம்புகாரில் கடல் ஆய்வு தொல்லியல் அகழ்வைப்பகம் நிறுவப்பட்டுள்ளது. அதன் விபரமும், தொல்பொருட்களின் வரலாறும் இந்த பூம்புகார் அகழ் வைப்பகக் கையேட்டில் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் செம்மையாக வெளிவர வேண்டும் என்று பதிப்புப் பணியில் எனக்கு ஊக்கம் அளித்த இத்துறை அகழாய்வாளர் முனைவர் திருமதி. சீ.வசந்தி அவர்களுக்கும் அனுமதி அளித்த தொல்லியல் துறை ஆணையர் அவர்கட்கும் நூல் நல்ல முறையில் வெளிவர பணிகள் செய்த அச்சுப் பிரிவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூம்புகார்
10-11-2008

**கோ. முத்துசாமி**
கல்வெட்டாய்வாளர்
கடலாய்வு அகழ்வைப்பகம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்க எண் |
| 1. | வரலாற்றில் பூம்புகார் | 1 |
| 2. | பூம்புகார் அகழாய்வுகள் | 7 |
| | 1. நில அகழாய்வு | |
| | 2. ஆழ்கடல் ஆய்வு | |
| 3. | அகழாய்வுப் பொருட்கள் | 13 |
| | சிற்பங்கள் | |
| | 1. கற் சிற்பங்கள் | 19 |
| | 2. மரச் சிற்பங்கள் | 23 |
| | சுடுமண் பொருட்கள் | 24 |
| | இதர தொல் பொருட்கள் | 38 |

# 1. வரலாற்றில் பூம்புகார்

**இருப்பிடம் :**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் பூம்புகார் உள்ளது. இவ்வூருக்கு காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயரும் வழங்குகிறது. பூம்புகாருக்கு இரயில் மூலம் செல்கின்ற பயணிகள் மயிலாடுதுறை இரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். சென்னையிலிருந்து செல்கின்ற பயணிகள் சீர்காழி நிலையத்திலும் இறங்கலாம். சீர்காழியிலிருந்தும், மயிலாடுதுறையில் இருந்தும் பேருந்துகள் மூலம் பூம்புகாரை அடையலாம். பூம்புகார் சீர்காழியிலிருந்து 23 கி.மீ. தொலைவிலும், மயிலாடுதுறையிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும் உள்ளது. சென்னை நகரிலிருந்து சொந்த ஊர்திகளில் செல்வோர் திண்டிவனம், பாண்டிச்சேரி, கடலூர், சீர்காழி ஆகிய ஊர்களின் வழியாக பூம்புகாரை அடையலாம். பூம்புகாரில் சுற்றுலாத் துறையின் தங்கும் விடுதிகளும் தனியார் உணவகங்களும் உள்ளன.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களிலிருந்து ஊர்திகள் மூலம் பயணம் செய்வோர் மேலூர், திருப்பத்தூர், காரைக்குடி, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், காரைக்கால், தரங்கம்பாடி, ஆக்கூர் வழியாகவும் இவ்வூரையடையலாம். மேலும் புதுக்கோட்டை, தஞ்சை, மயிலாடுதுறை வழியாகவும் செல்லலாம்.

**தொன்மை வரலாறு :**

இவ்வூர் 2000 ஆண்டுகட்கு முன்பு சோழர்களின் தலைநகராகவும், தலைச்சிறந்த துறைமுகப்பட்டினமாகவும்

திகழ்ந்தது. பூம்புகார் என்றால் காவிரி கடலில் புகும் இடமாகும். பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி, பல்புகழ்மூதூர், மண்ணகத்து வான்பதி, சோழப்பட்டினம், கபேரிஸ்எம்போரியம், கோலப்பட்டினம் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. கண்டரத்தனார், காரிக்கண்ணனார், சேந்தங்கண்ணனார், செங்கண்ணனார், நப்பூதனார் போன்ற சங்ககாலப் புலவர்கள் பூம்புகாரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். சிலம்பின் கோவலன், கண்ணகி இந்நகரைச் சேர்ந்தவர்கள் என்பதும் அறிந்ததே. வடஇந்தியாவிலுள்ள பார்குத் என்ற இடத்தில் கி.மு. 2 -ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த ஸ்தூபி உள்ளது. இந்த ஸ்தூபி மிக அழகாகவும், அழகிய சிற்பங்களாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தூபிக்கு காகந்தியைச் சேர்ந்த சோமா என்பவர் கொடை அளித்துள்ளார். காகந்தி என்பது பூம்புகாரின் மற்றொருப் பெயராகும். கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே பூம்புகாரில் புத்த சமயம் சிறப்புற்று விளங்கியதை அறிய முடிகின்றது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்து நடுகல் கல்வெட்டு வடாற்காடு மாவட்டம், செ.கடலூர் என்ற ஊரில் உள்ளது. இக்கல்வெட்டில் காகண்டியைச் சேர்ந்த அண்ணாலன் என்பவன் ஆனிரைகளை மீட்டு வீரமரணமடைந்தான் என்று தெரிவிக்கின்றது. காகண்டி என்பது காகந்தியின் திரிபாக இருக்கலாம் என்று திரு.நடனகாசிநாதன் கூறியுள்ளார். பூம்புகாரின் புகழைப்பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை போன்ற நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இங்கு வானளாவிய கட்டடங்களும், வைணவ, சைவ, பௌத்த, சமணக் கோயில்களும் இருந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. புகார் நகரம் பட்டினப்பாக்கம்,

மருவூர்பாக்கம், என்ற இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. புகாரில் இலவந்திகைச் சோலை, உண்ணாவனம், சம்பாபதிவனம், உவ்வனம் ஆகிய சோலைகளும் வெள்ளிடை மன்றம், பாவைமன்றம், நெடுங்கல்மன்றம், இலஞ்சிமன்றம், கொற்றப்பந்தல் போன்ற மன்றங்களும் இருந்தன. பூம்புகாரை நெய்தலங்கானத்து, இளஞ்சேட்சென்னி, சேட்சென்னி, நலங்கிள்ளி, கிள்ளிவளவன், கரிகால்சோழன் போன்ற மன்னர்கள் ஆட்சிப்புரிந்தனர். பூம்புகார் நகரம் கிரீஸ், ரோம், சீனம், மெசபடோமியா, பாபிலோனியா, எகிப்து, பாலஸ்தீனம் போன்ற நாடுகளுடன் வாணிப தொடர்பு கொண்டிருந்தது. பூம்புகாரில் மக்கள் பசியின்றி, நோயின்றி வளமுடன் வாழ மழை நீர்வளத்தை வேண்டி இந்திரனுக்காக "இந்திரவிழா" மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை போன்ற நூல்கள் பூம்புகார் வரலாற்றை விரிவாக எடுத்துக் கூறுகின்றன. அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, முத்தொள்ளாயிரம், தேவாரப் பாடல்கள், திருத்தொண்டர் புராணம், நந்திக்கலம்பகம் போன்ற நூல்களில் பூம்புகார் நகர் பற்றி குறிக்கப்படுகின்றது. மிளிந்தபன, புத்த ஜாதகக் கதைகள், அபிதம்மாவதாரம், புத்த வம்சாத்தகதா போன்ற பிராகிருத நூல்களும், பெரிப்ளஸ்மெரிஸ் எரித்ராய், தாலமி எழுதிய பூமி நூல், பிளினி எழுதிய பயண நூல் போன்றவைகளும் பூம்புகாரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு பெரிதும் துணைபுரிகின்றன.

பூம்புகாரில் பல நாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்ததை பட்டினப்பாலை எடுத்துக் கூறுகின்றது. ‘‘வடமலைப் பிறந்த மணியும், பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும், தென்கடல் முத்தும்

குணகடற்றுகிரும், கங்கைவாரியும், காவிரிப்பயனும், ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும் அரியவும், பெரியவும், நெரியஈண்டி வளர்தலை மயங்கிய நனந்தலை மதுரு" என்று பலநாட்டுப் பொருட்களைக் குறிக்கின்றது.

பூம்புகார் நகரம் பல நாட்டுக் கலைஞர்கள், வணிகர்கள் வாழ்ந்த புகழ்பெற்ற நகராகத் திகழ்ந்துள்ளது. பல நாட்டுக் கைவினைஞர்கள் கூடிச் செய்த பசும்பொன் மண்டபம் ஒன்று இங்கு இருந்ததை மணிமேகலை தெரிவிக்கின்றது. இதனை மகதவினைஞர், மராட்டகம்மியர், அவந்திக்கொல்லர், யவணதச்சர், தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் கூடிச் செய்தனர் என்று குறிப்பிடுகின்றது.

தாய்லாந்து நாட்டில் தகுவா-பா என்ற இடத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் காலத்து தமிழ் கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டில் நாங்கூர் நாட்டை சேர்ந்த வணிகக் குழுவினரான மணிக்கிராமத்தார் என்பவர்கள் "அவணிநாரணம்" என்ற ஏரியை வெட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கூர், மணிக்கிராமம் ஆகிய ஊர்கள் பூம்புகாருக்கு மிக அருகில் உள்ள ஊர்களாகும். பூம்புகாரைச் சேர்ந்தவர்கள் (அயல் நாட்டுடன்) தாய்லாந்துடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பை இது எடுத்துக் கூறுகிறது.

முதலாம் இராஜராஜன் தான் கட்டிய பெரியக் கோயிலுக்குத் தமிழ்நாட்டின் பலப் பகுதிகளிலிருந்தும் நாட்டிய மங்கையர் களைக் கொண்டு வந்து நடனமாட வைத்தான். அதற்காகக் கோயிலைச் சுற்றிலும் உறைவிடம், உணவு, ஊதியம் கொடுத்து ஆதரித்தான். நாட்டிய மங்கைகளில் நக்கர்ஊதாரி, நக்கன் அரங்கம், ஆகிய இருவரும் பூம்புகாரைச் சேர்ந்தவர்களாவர்.

இயற்பகைநாயனார், திருவெண்காடர் (பட்டினத்தார்) போன்ற அருளாளர்களும் பூம்புகாரைச் சேர்ந்தவர்கள். கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டில் சோழராட்சி வலுவிழந்து பாண்டியர் ஆதிக்கம் பெற்றனர். அவர்கள் உறையூர், கங்கைகொண்டசோழபுரம், பழையாறைப் போன்ற சோழர்களின் தலைநகராக விளங்கிய நகரங்களை அழித்ததாக பாண்டிய மன்னர்கள் தாங்கள் பெற்ற வெற்றிகளை மெய்கீர்த்திகளாக கல்வெட்டுகளில் கூறியுள்ளனர். எனவே பூம்புகாரும் அழிவிலிருந்து தப்பவில்லை. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பூம்புகாரைத் தரைமட்டமாக எல்லாம் அழித்துவிட்டு, புலவர் கடியனூர் உருத்திரங்கண்ணனார் கரிகாலசோழனிடம் பரிசாகப் பெற்ற 16 கால் மண்டபத்தின் அழகைப் பார்த்து அதை மட்டும் அழிக்க மனமில்லாமல் விட்டு வைத்தான் என்ற செய்தியை அவனது கல்வெட்டான திருவெள்ளறைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

சாயாவனத்து மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு 'இராசாதிராசவளநாட்டு, நாங்கூர்நாட்டு காவிரிப்பூம்பட்டினம்' என்றும் கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர் காலத்துப் பல்லவனீச்சுரம் கல்வெட்டு 'காய்க்காட்டு சீர்மை காவிரிப்பூம்பட்டினம்' என்றும் தெரிவிக்கின்றது. எனவே, பரந்து விரிந்த பூம்புகார் நகரம் நாங்கூர் நாட்டுக்கு உட்பட்ட சிறிய ஊராக மாறிவிட்டதும், மேலும் திருக்கடையூர் கல்வெட்டு ஒன்று அக்கோயிலின் அணிகலன்களையும், பாத்திரங்களையும், பாதுகாக்க காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமக்களை மன்னன் அமர்த்தினான் என்றும் தெரிவிக்கின்றது.

இவ்வாறு சங்க இலக்கியங்கள் மூலமாகவும் சோழர் மற்றும் பாண்டியர்களின் கல்வெட்டுச் செய்திகள் வாயிலாகவும் பூம்புகார் நாட்டின் அக்கால வரலாற்றினை உணர முடிகிறது.

## பூம்புகாரை ஆண்டவர்கள்

சங்க கால முடிவு வரை (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை சங்க காலம்)

| | | |
|---|---|---|
| கி.பி. 4க்கு முன் | - | சோழர் |
| கி.பி. 4 முதல் 5 - ஆம் நூற்றாண்டு வரை | - | களப்பிரர் |
| கி.பி. 6 முதல் 9 -ஆம் நூற்றாண்டு வரை | - | பல்லவர் |
| கி.பி. 9 முதல் 13 -ஆம் நூற்றாண்டு வரை | - | சோழர் |
| கி.பி. 13 முதல் 14 -ஆம் நூற்றாண்டு வரை | - | பாண்டியர் |
| கி.பி. 15 முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை | - | விஜயநகர் - நாயக்க மன்னர்கள் |
| கி.பி. 18 முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை | - | தஞ்சை - மராட்டியர் |
| கி.பி. 19 முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை | - | ஆங்கிலேயர் |
| கி.பி. 1947 முதல் | - | சுதந்திர தமிழகம் |

# 2. பூம்புகார் அகழாய்வுகள்

பூம்புகாரில் நிலத்திலும் ஆழ்கடலிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நில அகழாய்விலும், கடல் அகழாய்விலும் பண்டையக் கட்டடப் பகுதிகள், பண்டைய நாணயங்கள், பானை ஓடுகள், சுடுமண் பொருட்கள், மணிகள் போன்ற தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் மூலமாகவும் பூம்புகார் 2000 ஆண்டுகட்கு முன்பு தலைசிறந்த நகராகவும், பன்னாட்டு துறைமுகப்பட்டினமாகவும் விளங்கி இருந்தது தெரியவந்துள்ளது.

## நில அகழாய்வு

பூம்புகாரில் 1910-ஆம் ஆண்டு முதலே ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. 1963-64-ஆம் ஆண்டில் மத்திய தொல்லியல் துறையைச் சார்ந்தவர்களும் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் கே. வி. இராமன் அவர்கள் மேற்பார்வையிலும் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கீழையூரைச் சேர்ந்த மங்கைமடம் என்ற இடத்தில் படித்துறை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் முன்புறத்தில் இரண்டு மரத் தூண்கள் காணப்பட்டன. இந்த மரத்தூண்கள் படகுகளைக் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டன. பூம்புகாரில் பல்லவனீச்சுரம் என்ற இடத்தில் புத்தவிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. புத்தவிகாரம் என்பது புத்ததுறவிகள் தங்கும் இடமாகும். பூம்புகாரில் நடைபெற்ற அகழாய்வுகளில் இது முக்கிய கண்டு பிடிப்பாகும். இந்த புத்தவிகாரம் சிறிய அறைகளைக் கொண்டு சுண்ணாம்பு, செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதி, நாகார்ஜுனகொண்டா போன்ற புத்தவிகாரங்களைப் போல் இதுவும் காணப்படுவதாக

டாக்டர் கே.வி.இராமன் அவர்கள் கூறியுள்ளார். ஆந்திராவில் உள்ள பால்நாடு (பளிங்குகல்) என்ற வகை கல்லினால் அமையப் பெற்ற புத்தபாதம் கிடைத்துள்ளது. இதில் இரண்டு காலடிகள், ஸ்வந்திகம், ஸ்ரீவத்சம், பூரணகலசம் போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளைப் புத்தபீடிகை என்று நூல்கள் கூறுகின்றன. கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் உறையூரைச் சேர்ந்த புத்ததத்தர் என்பவர் அபிதம்மாவதாரம் என்ற நூலை எழுதியுள்ளார். இது பாலிமொழியில் எழுதப்பட்டதாகும். புத்ததத்தர், கணதாசன் என்பவர் சோலைகள் நிறைந்த காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்த புத்தபள்ளியில் இந்நூலை எழுதியதாக குறிப்பிட்டுள்ளார். அகழாய்வில் பல்லவனீச்சுவரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தவிகாரம் இதுவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவ்விடத்தில் செங்கல், சுதையாலான தூண்கள் கிடைத்துள்ளன. புகாரில் புலி உருவம் பொறிக்கப்பட்ட செம்பாலான சங்ககால சோழர் காசு கிடைத்துள்ளது. வானகிரி என்ற இடத்தில் பண்டைய கால நீர்த்தேக்கம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நீர்தேக்கத்திற்கு காவிரியிலிருந்து நீர் வருவதற்கு கால்வாய் ஒன்று இருந்திருக்க வேண்டும். வெள்ளையனிருப்பு என்ற இடத்தில் ரோமானிய நாணயம் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அகழாய்வு மூலம் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் உறுதி ஆகியுள்ளன என்பது தெரிகிறது.

## தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட நில அகழாய்வு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1995-ஆம் ஆண்டு முதல் 1998-ஆம் ஆண்டு முடிய பூம்புகாரில் பல பகுதிகளில் அகழாய்வுப் பணியை மேற்கொண்டது. 1995-ஆம் ஆண்டில்

பணியைத் தொடங்கினர். (1) மேலையூர் அருள்மிகு பிரியாவிடங்கர் என்ற சிவன்கோயிலின் பின்புறத்தில் 4X4 மீ அளவில் குழி தோண்டப்பட்டது. இங்கு தெற்கு வடக்காக செங்கற்களால் கட்டப்பட்ட சுவரின் பகுதி தென்பட்டது. இது கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டின் நாயக்கர் காலத்தைச் சேர்ந்ததாகும். இச்சுவர் இக்கோயிலின் பழையத் திருசுற்றின் அடிச்சுவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (2) சாயாவனம் காளியம்மன்தோப்பு என்ற இடத்தில் மேற்கொண்ட அகழாய்வில் இடைக்கால பானை ஓடுகளும், கெண்டிமூக்குகளும் சேகரிக்கப் பட்டன. இரண்டாம் கட்டமாக 1995-96ல் (3) மணிக்கிராமம் கிழார்வெளி என்ற இடத்தில் திரு.ராமசாமி கோனாரின் நன்செய் நிலத்தில் மேற்கொண்ட அகழாய்வில் பண்டையப் படகுத்துறை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த படகுத்துறையில் உள்ள செங்கல்லின் அளவு நீளம் 2 அடி அகலம் $1^1/_2$ அடி, கனம் 8 அங்குலம் ஆகும். இங்கு சுடுமண்ணாலான புத்தர் திருவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இலை, பறவை, குதிரை, படகு உருவம் பொறித்த ரோமானிய பானை ஓடுகள் கிடைத் துள்ளன. இந்த படகுத்துறையின் காலம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று ஆய்வாளர்களால் கணிக்கப் பட்டுள்ளது. உப்பை நெல்லுக்கு விற்று அதை ஏற்றி வந்த படகுகள் மரத்தறிகளிலே கட்டப்பட்டிருந்தன என்பதைப் பட்டினப்பாலை

''நெல்லொடு வந்த வல்வாய்ப்பஃறி
பனைநிலைப்புரவியின் அனைமுதல் பிணிக்கும்
கழி சூழ் படப்பை நன்நகர்''

என்று குறிக்கின்றது. இப்படகுத்துறை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. மூன்றாம் கட்டமாக அகழாய்வுப்

பணியைக் கிழார்வெளியில் மேற்கொண்டு படகுத்துறை முழுப் பகுதியையும் வெளிகொணர்ந்தனர்.

(4) மணிக்கிராமத்தில் பனைமரத்தடி தோப்பு என்ற இடத்தில் 4X4 மீ அளவில் அகழாய்வு குழி போடப்பட்டது. இங்கு ஏராளமான கருப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், ஆகிய நிறங்களில் மணிகள் கிடைத்தன. மணிகள் செய்வதற்குரிய மூலப் பொருட்கள் வண்ணக்கட்டிகள் கிடைத்தன. அடுப்பின் ஒரு பகுதி கிடைத்தது. இவ்வகழ்வாய்வில் ரோம் நாட்டு ரௌலட்டட் பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. இங்கிருந்துதான் மணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். மணிக்கிராமத்தில் நாங்கூர் மணிக்கிராமத்தார் என்ற வணிகக் குழுவினர் வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். நாங்கூர் என்ற ஊர் இவ்வூர் அருகில் உள்ளது. இங்கு கிடைத்த தொல்பொருட்கள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நான்காம் கட்டமாக 1997-98-ஆம் ஆண்டில் (5) வானகிரிதோசக்குளம், (6) கீழையூர், சித்தங் காத்தன் கோயில், (7) மேலையூரைச் சேர்ந்த அய்யனார்திடல், மேலையூர், அடைக்கலபுரம் ஆகிய இடங்களில் அகழாய்வு பணியை மேற்கொண்டனர். இவற்றில் வானகிரிதோசக்குளம் என்ற இடத்தில் மேற்கொண்ட அகழாய்வு பூம்புகார் வரலாற்றுக்கு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இங்கு 4X4 மீ அளவில் மூன்று குழிகள் போடப்பட்டன. இங்கு குழி எண் 13-ல் பிராகிருத சொல் எழுதப்பட்ட பிராமி எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடு கிடைத்தது. சங்க காலத்தில் முக்கிய நகரங்களான உறையூர், கரூர், கொற்கை போன்ற இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளில் பிராமி பானை ஓடுகள் கிடைத்துள்ளன. பூம்புகாரில் இவ்வகை பானை ஓடு வானகிரிதோசக்குளம்

அகழாய்வில் முதன்முதலில் 1997-98-ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. திரு.நடன.காசிநாதன் அவர்கள் இச்சொல்லை "(அ)ஹாபாகேதரோ" என்று படித்துள்ளார்.

## கடல் அகழாய்வு

1981-ஆம் ஆண்டில் பூம்புகார் கடலில் முதற்கட்ட ஆய்வை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், கோவாவில் உள்ள தேசிய கடலாய்வு நிறுவனமும் சேர்ந்து கடல் அகழ் ஆய்வை மேற்கொண்டன. இந்த ஆய்வில் சைடுஸ்கேன் சோனார், எக்கோசவுண்டர், மேக்னடோமீட்டர் ஆகிய கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இரண்டு முதல் 3 மீட்டர் உயரமுள்ள சில பொருட்கள் கடலுக்கடியில் இருப்பது கண்டறியப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25-ஆம் நாளில் பெருமளவில் இரண்டாவது கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பூம்புகார் கடற்கரையிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் 70 அடி ஆழத்தில் பண்டைய காவிரி ஆற்றின் வடக்குகரையை யொட்டி மூன்று கட்டடப் பகுதிகளும், தெற்கு கரையையொட்டி இரண்டு கட்டடப் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. வடக்குக் கரையில் உள்ள கட்டடம் ஒரு கோயிலாகவோ, கோட்டைக் கொத்தளமாகவோ, புத்தவிகாரமாகவோ இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் கடற்கரையையொட்டி 200 மீ தொலைவில் கடலினுள் 7 அல்லது 8 அடி ஆழத்தில் சில கட்டடப் பகுதிகள் தொடர்ந்து இருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டது. இப்பகுதியில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கருப்பு-சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன. பூம்புகாரின் தென்பகுதியில் காவிரியாறு கடலினுள் கலக்கும் இடத்திற்கு எதிரே 4 கி.மீ. தொலைவில் தரைதட்டி உடைந்தக் கப்பல் மூழ்கியிருப்பதும் கண்டறியப்பட்டது. இக்கப்பல் கி.பி. 18-ஆம்

நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இக்கப்பலிலிருந்து சில ஈயக் கட்டிகள் வெளிக்கொணரப்பட்டு உள்ளன. இக்கப்பலில் ஒரு பீரங்கி இருப்பதும், வெடிமருந்து அடங்கிய பெட்டி இருப்பதும் தெரியவந்துள்ளன. கடலகழாய்வில் கிடைத்துள்ள கட்டடப் பகுதிகள், பானை ஓடுகள் போன்ற தொன்மை பொருட்கள் பல இடங்களிலும் பரவி இருப்பதன் மூலம் பூம்புகார் நகரம் கடலால் கொள்ளப்பட்டது உண்மை என்ற விபரம் தெரிய வருகிறது.

# 3. பூம்புகாரில் கடல் ஆய்வு தொல்லியல் அகழ்வைப்பகம்

1997-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாள் ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் பூம்புகாரில் திறந்து வைக்கப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக பூம்புகாரில் மட்டுமே ஆழ்கடல் அகழ்வைப்பகம் உள்ளது. இந்த அகழ்வைப்பகத்தில் பூம்புகார், மேலையூர், மணிக்கிராமம், கிழார்வெளி, சாயாவனம் காளியம்மன் தோப்பு, வானகிரிதோசக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த அரிய தொல்பொருட்கள், பூம்புகார் ஆழ்கடலகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள், பூம்புகாரில் துறை ஆய்வாளர்கள் களஆய்வு மேற்கொண்ட போது கிடைத்த தொல்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பூம்புகாரைச் சுற்றியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தொல்பொருட்கள் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. பூம்புகார் வரலாற்றோடு தொடர்புடைய இலக்கியங்கள் கொண்ட பட்டியல், 2000 ஆண்டுகட்கு முன்பிருந்த கப்பல் வகைகளின் படங்கள், தமிழ்நாட்டில் இதுவரை நடைபெற்றுள்ள அகழாய்வு செய்துள்ள இடங்களின் பட்டியல், ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் இங்கு இடம் பெற்றுள்ளன. பூம்புகார் மற்ற நாடுகளுடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு, பாறை ஓவியங்களில் இடம் பெற்றுள்ள கலம் செலுத்துவோர் மற்றும் பயணியர், உருவங்கள், ஓவியங்களாக வரையப் பெற்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பானை ஓடுகளில் இடம் பெற்றுள்ள கப்பல், பூம்புகார் சுற்று பகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்புத் தலங்களின் செப்புத் திருமேனிகளின் நிழற்படங்கள்,

பூம்புகார் ஆழ்கடலகழாய்வு செயலாக்கம் நிழற்படங்கள் ஆகியன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பூம்புகார் வரலாறு மட்டுமின்றி வாணிபம் தொடர்புடைய பலச் செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கு இவ்வகழ்வைப்பகம் பெரிதும் துணைபுரிகின்றது.

## பூம்புகார் அகழாய்வு தொல்பொருட்கள்

பூம்புகாரில் மேலையூர், பிரியாவிடங்கர் கோயில் அருகில் நடந்த அகழாய்வு சாயாவனம் காளியம்மன்தோப்பு, மணிக்கிராமம், கிழார்வெளி, வானகிரிதோசக்குளம் ஆகிய இடங்களில் துறை அகழாய்வுகள் மேற்கொண்ட இடங்களிலிருந்து கிடைத்த கருப்பு - சிவப்பு பானை ஓடுகள், ரோமானிய ரௌலட்டட், அரிட்டைன் பானை ஓடுகள், ஆம்போரா கெண்டிமூக்குகள், அடுப்பின் பகுதி, சுடுமண் புத்தர் பாதம், புத்தர் தலைப் பகுதி, கண்ணாடி மற்றும் பீங்கான் ஓடுகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

## பானை ஓடுகள்

பழைய இடத்தின் காலத்தைக் கணிப்பதற்குப் பானை ஓடுகள் பெரிதும் துணைபுரிகின்றன. பூம்புகார் அகழாய்வில் கருப்பு-சிவப்பு நிற பானை ஓடுகள், கருப்பு நிற பானை ஓடுகள், ரோமானிய நாட்டைச் சேர்ந்த ரௌலட்டட், அரிட்டைன், பானை ஓடுகளும், தடித்த ஆம்போரா, மதுஜாடியின் அடிப்பகுதி போன்றவைகளும், இடைக்கால பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இவைகள் பூம்புகார் நகரத்தின் காலத்தைக் கணிப்பதற்கு பெரிதும் துணைபுரிகின்றன. வானகிரிதோசக்குளம் அகழாய்வில் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு கிடைத்தது. இதனால் பூம்புகார் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவோடும் மற்றும்

வெளிநாடுகளுடனும் கொண்டிருந்த தொடர்பை வெளிப்படுத்துகிறது.

## கருப்பு - சிவப்பு நிற பானை ஓடுகள்

தமிழகத்தில் மக்கள் வசித்த ஊர்களிலும், சவக் குழிகளிலும், ஈமத்தாழிகளிலும் இவ்வகைப் பானை ஓடுகள் காணப் படுகின்றன. பானையின் உட்பக்கம் கருப்பாகவும், வெளிப் பக்கம் விளிம்பு தவிர ஏனைய இடங்களில் சிவப்பாகவும் இருக்கும். இதற்கு கருப்பு - சிவப்பு நிற மட்பாண்ட வகை என்று அழைக்கப்படுகிறது. இப்பானை ஓடுகள் சங்ககாலத்தைச் சார்ந்தவை என்று கணித்துள்ளார். இந்த வகை பானை ஓடுகள் மணிக்கிராமம், கிழார்வெளி, வானகிரி போன்ற இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இந்த வகை பானை ஓடுகள் தமிழகத்தின் பண்டைய நகரங்களான உறையூர், அழகரை, திருக்காம்புலியூர், செங்கமேடு, சானூர், குன்றத்தூர், காஞ்சிபுரம், கொற்கை, வசவசமுத்திரம் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன.

## ரோமானிய நாட்டு பானை வகைகள்

ரோமானிய நாட்டிலிருந்து இவ்வகை மட்பாண்டங்கள் நேரிடையாக இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டில் போலியாகவும் தயாரிக்கப்பட்டன. ரோமானிய நாட்டு பானைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று ரௌலட்டட் பானை ஓடுகள், இரண்டு அரிட்டைன் பானை ஓடுகள், மூன்று ஆம்போரா மதுஜாடி என மூன்று வகையான பானை ஓடுகளும் பூம்புகார் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன.

## ரௌலட்டட் பானை ஓடுகள

இவ்வகை பானை ஓடுகள் வழவழப்பாக கண்ணாடி போல் அழகாக இருக்கும். முற்றிலும் கருப்பு நிறமாக இருக்கும். உள்பக்கத்தில் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிய பல வட்டங்களில் சிறுசிறு புள்ளிகளால் பொறிக்கப்பட்டிருக்கும் இந்த வகை பானை ஓடுகள் மணிக்கிராமம், பனைமரத்தடி, கிழார்வெளி அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இவைகள் அகழ் வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## அரிட்டைன் பானை ஓடுகள்

இவ்வகை பானை ஓடுகள் வழவழப்பாகவும், பளபளப்பும் கொண்டிருக்கும். மங்கலான காவிப்பூச்சுடன் காணப்படும். இந்த வகைப் பானை ஓடுகள் மணிக்கிராமம், பனைமரத்தடி, கிழார்வெளி போன்ற இடங்களில் கிடைத்துள்ளன.

## ஆம்போரா ஜாடி ஓடுகள்

ரோமானிய மதுஜாடிகளுக்கு ஆம்போரா என்று பெயர். மேற் பகுதி (வாய்ப்பகுதி) விரிந்தும், அடிப்பகுதி குவிந்தும் காணப்படும். நிறம் மங்கிய சிவப்பாக இருக்கும். இது மணிக்கிராமத்தில் கிடைத்துள்ளது. இதன் உயரம் 50 செ.மீ. சுற்றளவு 56 செ.மீ ஆகும். உயர்ந்த வகை மதுவை இவற்றில் ஊற்றி பூமியில் புதைத்து வைக்கும் பழக்கம் இருந்துள்ளது. பல ஆண்டுகள் கழித்து இதை எடுத்துப் பயன்படுத்தி உள்ளனர். காஞ்சிபுரத்தில் ஒரே இடத்தில் 40க்கும் மேற்பட்ட இவ்வகை ஜாடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

## அகழாய்வில் கிடைத்த சுடுமண் உருவங்கள்

பூம்புகார் நில அகழாய்வில் பல சுடுமண் பொருட்கள் கிடைத்துள்ளன. இவற்றில் முக்கியமானவை புத்த பாதம், புத்தர் தலைப் பகுதி, மூடிகள், அடுப்பின் பகுதி, கரை ஓடு, பானையின் மூடி, வட்டில், பெரிய செங்கல் போன்றவை.

## புத்தர் தலைப் பகுதி, புத்த பாதம்

புத்தர் தலைப் பகுதி, புத்த பாதம் முதலியன கிழார்வெளி அகழாய்வில் கிடைத்தவை. புத்தபாதம் வட்டவடிவாக உள்ளது. இதில் இரண்டு காலடிகள் உள்ளன. இதன் சுற்றளவு 22 செ.மீ. ஆந்திர நாட்டு பால்நாடு என்ற ஒருவகைக் கல்லினால் செய்யப்பட்ட புத்தபாதம் ஒன்று பல்லவனீச்சுரம் புத்தவிகாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். புத்தர் தலைப்பகுதியில் மேற்புறத்தில் ஞானமுடி (உஷ்னிசம்) என்ற அமைப்பு காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டாகும்.

## ஆண் உருவம்

மனிதனின் தலைமுதல் மார்பு வரை உள்ள உருவப் பகுதி மட்டும் கிடைத்தது. நெற்றியில் கண்ணிமாலை காணப்படுகிறது. கழுத்தில் மணிமாலை அணிசெய்கிறது. காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டாகும். இது தமிழ்நிலக் கடவுள் முருகனாக இருக்கலாம்.

## பெரிய வகை செங்கற்கள்

கிழார்வெளி பண்டையப் படகுத்துறையிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். நல்ல சிவப்பு நிறத்தில் உள்ளது. நீளம் 2 அடி, அகலம் $1^1/_2$ அடி, கனம் 8 அங்குலம், காலம்

கி.மு. 3-ஆம் நூற்றாண்டு, கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கெண்டிமூக்குகள், கூரைஓடு, பானையின் மூடி, வட்டில் போன்றவை அகழாய்வில் கிடைக்கப்பெற்று, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கெண்டிமூக்குகள் அதிக அளவில் கங்கைகொண்டசோழபுரம் அகழாய்விலும் கிடைத்துள்ளன. ஒரு செங்கல் மீது மற்ற செங்கல் வைத்து கட்டும் போது இணைப்புக்காக பதப்படுத்திய கெட்டியான களிமண் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

## கடலின் மூழ்கிய கட்டடத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கல்

பூம்புகார் வடக்கேயுள்ள கடைக்காட்டிற்கு கிழக்கில் கடலில் 5 கி.மீ. தொலைவில் ஆய்வு செய்து கடலுக்குள் இருந்து எடுத்து வரப்பட்டதாகும். இந்தக் கல் கடலுக்குள் மூழ்கியிருக்கும் கட்டடத்தின் பகுதியைச் சேர்ந்தது ஆகும். இக்கல் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். நீண்ட காலம் கடலுள் இருந்ததால் சகதி அதன்மீது படிந்து இருகி கெட்டியாகி உள்ளது.

## கப்பலின் பகுதிகள்

வானகிரிக்கு கிழக்கே கடலில் தீப்பிடித்து எரிந்து மூழ்கிய கப்பல் கிடக்கிறது. தீப்பிடித்து எரிந்த சில பகுதிகள், கடலில் தரைதட்டி மூழ்கியிருந்த கப்பலின் பாகங்கள், முதலியன இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## ஈயக்கட்டிகள்

பூம்புகார் கடலில் தரைதட்டி மூழ்கியிருந்த கப்பலிருந்து எடுத்துவரப்பட்ட ஈயக்கட்டிகள் 5 காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இவைகளில் மூன்றில் மட்டும் W : BLACKETT

என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. மற்றொரு ஈயக் கட்டியின் அடிப்பகுதியில் '1792' என்று ஆண்டு குறிக்கப் பட்டுள்ளது. நீளம் 88 செ.மீ., அகலம் 16 செ.மீ. காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. ஒரு ஈயக்கட்டியின் எடை 75 கி.கி. உள்ளது. இவை ஜெர்மன் நாட்டிலிருந்து அக்காலத்தில் அச்சு எந்திரத்தின் பகுதிகளும் அச்சு எழுத்துகள் தமிழில் உருவாக்கவும் பயன்படுத்த ஏற்றி வந்தவை என்பது புலப்படுகிறது.

## கருங்கல் சிற்பங்கள்

### புத்தர் சிற்பம்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் அமைந்துள்ளது சின்னமேடு என்ற சிற்றூர். பூம்புகாரிலிருந்து தெற்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் கடற்கரையை ஒட்டிய சின்னங்குடிக்கு அருகிலுள்ள சிறு கிராமமாகும். கரையிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள கடலில் இராமசாமி என்பவர் மீன் பிடிக்கும் போது மீன் வலையில் கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிற்பம் சிக்கியது. இச்சிற்பத்தை இவ்வூர் மக்கள் இங்குள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயிலில் வைத்து பாதுகாத்து வந்தனர். தினகரன் நாளேடு நிருபர் அளித்த தகவலின்படி காப்பாட்சியர் கா.நெடுஞ்செழியன் இப்பகுதியில் களஆய்வு செய்தபோது இதை புத்தர் சிற்பம் என கண்டுபிடித்து இதை அகழ்வைப்பகத்திற்கு கொண்டு வந்தார். அது புத்தர் உருவம்தான் என்று அடையாளம் காண இயலாதபடி கடற்பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தது. இச்சிற்பம் சாம்பல் நிறமுடைய ஆந்திரநாட்டு பால்நாடு என்ற ஒரு வகைக் கல்லினால் வடிக்கப்பட்டுள்ளது. புத்தர் நின்ற நிலையில் காணப்படுகின்றார். புத்தர் கழுத்து முதல் கால் வரை

உடையணிந்து காணப்படுகின்றார். நீள் செவி, கீழே சரிந்து விழும் ஆடை ஆகியவற்றைக் கொண்டு இவ்வுருவம் புத்தர் தான் என அறிந்து கொள்ளமுடிகிறது. ஏனெனில் இவ்வுருவத்தின் பெரும்பாலானப் பகுதிகள் கடற்பூச்சிகளால் அரிக்கப்பட்டு சிதைந்த நிலையில் உள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 57 செ.மீ, அகலம் 25 செ.மீ. இச்சிற்பத்தின் காலம் கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டாகும். தற்போதும் இச்சிற்பம் எடுக்கப்பட்ட கடற்பகுதியில் கற்கள் வலையில் சிக்குவதாகக் கூறுகின்றனர். இவ்விடம் மூழ்கிய ஒரு புத்தவிகாரமாக இருக்கலாம். இதே கல்லினால் வடிக்கப்பட்ட புத்தபாதம் பல்லவனீச்சுரம் புத்த விகாரத்தில் முன்பு மைய அரசு நடத்திய அகழாய்வில் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். புத்ததத்தர் பாலி மொழியில் அபிதம்மாவதாரம் என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலை சோலைகள் நிறைந்த கணதாசன் கட்டிய பூம்புகாரிலுள்ள புத்தப் பள்ளியில் தங்கி எழுதியதாகக் குறித்துள்ளார். பூம்புகாரில் புத்தப்பள்ளி இருந்ததைப் பற்றி சிலப்பதிகாரம்

> "அறவோர் பள்ளியும் அறன் ஓம்படையும்
> புறநிலக் கோட்டத்துப் புண்ணியதானமும்"
>
> \- என்று கூறுகிறது.

> 'பளிக்கறை மண்டபம் உண்டு அதனுள்ளது
> தூநிற மாமணிச்சுடரொளி விரிந்த
> தாமரைப் பீடிகை தான் உண்டு"

> "ஆதிமுதல்வன் அறிவாழி ஆள்வோன்
> பாதபீடிகை பணிந்தனன் ஏத்தி"

என்று காவிரிப்பூம்பட்டினத்தில் புத்தமதம் சிறப்புற விளங்கியதும் இது குறித்து மணிமேகலைக் காப்பியமும் எடுத்து

கூறுகின்றது. பூம்புகார் மேலையூர் என்ற இடத்தில் தங்க முலாம் பூசப்பட்ட மைத்ரேயர் செப்புத்திருமேனி கிடைத்தது. இதன் காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டாகும். முதலாம் இராஜராஜன் நாகப்பட்டினத்தில் புத்தவிகாரம் அமைத்து கொள்வதற்குக் கடாரத்தரசனுக்கு அனுமதி அளித்தான். நாகப்பட்டினம் மாவட்டத்தில் பௌத்தப்பள்ளிகள் பூதமங்கலம், புத்தமங்கலம், புத்தகரம், போதிமங்கலம், புத்தகுடி, சங்கமங்கலம், புத்தகளூர் போன்ற ஊர்களில் இருந்ததாகத் தெரிய வந்துள்ளது.

## அய்யனார் கற்சிற்பம்

இச்சிற்பம் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மேலப்பெரும்பள்ளம் என்ற ஊரில் சேகரிக்கப் பட்டதாகும். அய்யனார் சிலை செவ்வக வடிவான பீடத்தின் மீது இடது காலை மடித்து வைத்து, வலது காலைக் குத்திட்டு அமர்ந்த நிலையுடன் காணப்படுகிறது. வலது கரம் வலது காலின் மீது வைத்து தொங்கும் கரமாக உள்ளது. இடது கரம் உடைந்துள்ளது. கழுத்தில் பதக்கமும், மார்பில் புரிநூலும், வயிற்றில் உதிரபந்தமும், கையில் காப்பும், தோளில் கேயூரமும் அணிசெய்கின்றன. தலைப்பகுதி விரிசடையாகக் காட்டப் பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 96 செ.மீ, அகலம் 40 செ.மீ. ஆகும். இச்சிற்பத்தின் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகும். முற்காலச் சோழர் கலைப்பாணிக்கு இச்சிற்பம் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

## விநாயகர்

விநாயகர் சிற்பம் பூம்புகாரில் கடற்கரைப் பகுதியில் சேகரிக்கப்பட்டதாகும். இச்சிற்பம் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இது இடம்புரி விநாயகர். இச்சிற்பத்தின் உயரம் 69 செ.மீ., அகலம் 45 செ.மீ, காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர் கலைப் படைப்பாகும். இச்சிற்பம் மங்கிய வெள்ளைநிறக் கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விசுவாமித்திரர் - மேனகைச் சிற்பம்

பூம்புகாரைச் சேர்ந்த திரு. எம்.கணேசன் என்பவர் அன்பளிப்பாக அகழ்வைப்பகத்திற்கு அளித்துள்ளார். காப்பாட்சியர் கோ.முத்துசாமி இதனைச் சேகரித்துள்ளார். விசுவாமித்திரர் தவம் இருந்தபோது, தவத்தைக் கலைப்பதற்கு அனுப்பப்பட்டவள் சொர்க்கலோகத்து அழகியான மேனகை. மேனகையின் இரண்டு கரங்களும் விசுவாமித்திரரின் தோளின் மீது வைத்து, முகத்தை விசுவாமித்திரரின் முகத்தில் முத்தம் கொடுக்கும் பாவனையில் கட்டி அணைத்தபடி உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. மேனகையின் வலது கால் விசுவாமித்திரரின் இடுப்பின் மீது வைத்துள்ளது. மேனகையின் தலைமுடி கீழே இடுப்புவரை தொங்குகிறது. மார்பகங்களில் கச்சை கட்டப்படாமல் நிர்வாண நிலையில் மேனகையின் உருவம் காட்டப்பட்டுள்ளது. விசுவாமித்திரர் மேனகையின் உருவம் ஒரே கல்லில் வடிக்கப் பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 32 செ.மீ. அகலம் 16 செ.மீ. 100 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

# மரச் சிற்பங்கள்

## காமதேனு கடல்கன்னி

இச்சிற்பம் பூம்புகார் கடலில் மிதந்து வந்துள்ளது. இதனை மீனவர் திரு. மருதமுத்து என்பவர் எடுத்து வந்து அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். சீன நாட்டைச் சேர்ந்ததாகும். கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சதுரவடிவான பீடத்தின்மீது நின்ற நிலையில் முழு பெண் உருவமாக காட்டப்பட்டுள்ளது. தோள்முதல் பாதம் வரை வரிவரியான ஆடை அணிந்துள்ளது. தலையின் மேற்பகுதி பசுமாட்டின் தலை காட்டப்பட்டுள்ளது. மாட்டின் மூக்கு மூக்கணாங் கயிறுடன் அமைந்தும் தலையின் நெற்றியில் அழகான பொட்டு வடிக்கப்பட்டுள்ளது. பெண்ணின் காதுகள் பசுமாட்டின் காதுகளாக உள்ளன. பசுமாட்டின் கழுத்தில் மணி மாலை காட்டப்பட்டுள்ளது. பெண்ணின் தலைமுடி பின்புறத்தில் தொங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கரங்களும் உடைந்து விட்டன. பெண்ணின் தலைமீது பசுமாட்டின் தலை உள்ளதால் காமதேனு உருவம் என்றும் கருதலாம். இந்திய நாட்டின் கலாச்சாரத்தை சீன நாட்டவர்களும் பின்பற்றுவது இந்த சிற்பத்தின் மூலம் தெரிய வருகிறது. உயரம் 45 செ.மீ. அகலம் 13 செ.மீ. ஆகும்.

## அம்மன்

இச்சிற்பம் பூம்புகாரில் கிடைத்ததாகும். அம்மன் வட்ட வடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறது. வலது கரம் தொங்கும் கரமாகவும், இடது கரம் அபயமுத்திரையிலும் காணப்படுகிறது. மார்பில் கச்சை கட்டப்பட்டுள்ளது. கழுத்தில் ஆரமும், மற்றொரு பெரிய ஆரமும் அணி செய்கின்றன. தலையில் கொண்டை இடதுபுறம்

கட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 45 செ.மீ. அகலம் 13 செ.மீ. இச்சிற்பம் சுமார் 100 ஆண்டுகள் பழமையானதாகும்.

### திருநீற்றுமாடம்

பூம்புகார் தருமகுளம் பகுதியில் சேகரிக்கப்பட்டது. திரு.தண்டபாணி அய்யர் அவர்கள் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். இது ஒரே மரத்தால் செய்யப்பட்டதாகும். மேற்பகுதி தொங்குவதற்கு வசதியாக ஒன்றொடொன்று இணைத்து சங்கிலி போல் அமைந்தும், கீழ்ப்பகுதி இரண்டு கிண்ணங்கள் போன்ற அமைப்பும் உள்ளன. உயரம் 62 செ.மீ., அகலம் 30 செ.மீ. சுமார் 200 ஆண்டுகள் பழமையானதாகும். மரச்சங்கிலியை யானை ஒன்று தனது தும்பிக்கையில் பிடித்திருப்பது போல் மேலே யானை உருவம் செதுக்கப்பட்டுள்ளது. ஒரே மரப்பலகையில் கோர்வையாக சிவச்சின்னங்களை நேர்த்தியாகச் செதுக்கியிருப்பது தமிழக மரத் தச்சரின் கலைத் திறமையை உணர்த்துகிறது. இது கல்வெட்டு ஆய்வாளர் கோ.முத்துசாமி பெருமுயற்சியுடன் அன்பளிப்பாகப் பெற்று இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டது.

## சுடுமண் பொருட்கள்

சுடுமண்ணால் செய்யப்பட்ட பொருட்கள் 2000 ஆண்டுகட்கு முன்பே பயன்பாட்டில் இருந்தன. பூம்புகாரைச் சுற்றியுள்ள ஊர்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பண்டைய சுடுமண் பொருட்களை இவ்வகழ்வைப்பகத்தில் காணலாம்.

### 1. தாய்தெய்வ உருவங்கள்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மேலப் பெரும்பள்ளம் - வீராலி என்ற இடத்தில் கிடைத்த முதுமக்கள் தாழியின் வெளிபுறத்தில் அமைக்கப்பட்டிருந்த உருவங்களாகும்.

இவைகளை மேலப்பெரும்பள்ளம் புலவர் ந.தியாகராசன் அவர்கள் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். இரண்டு தாய் உருவங்களில் ஒன்று வயதானதாகவும், மற்றொரு உருவம் இளமையாகவும் செய்யப் பட்டுள்ளது. காதுகள் இரண்டும் யானைக் காதுகள் போல் அகலமாக உள்ளன. மார்பகங்கள் இரண்டும் சரிந்து கீழே தொங்கும் நிலையில் வயதான தோற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கரங்களும் அகன்று, விரிந்து தொங்கும் நிலையில் உள்ளது. கனுக்காலுக்குக் கீழே உள்ளப் பகுதிகள் உடைந்துள்ளன. மார்பகங்களில் கச்சை கட்டப்படவில்லை. இடுப்பில் தடித்த ஒட்டியாணம் அணி செய்கிறது. உயரம் 12 செ.மீ. அகலம் 8 செ.மீ. ஆகும். காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு. மற்றொரு பெண் உருவம் இளமையாக காட்டப்பட்டுள்ளது. தலையில் கொண்டை வலதுபுறத்தில் காட்டப்பட்டுள்ளது. மார்பகங்கள் இறுக்கமாக கச்சை அணிந்து இளமை தோற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இடது கரம் இடது புறம் இடுப்பின் மீது வைத்து காணப்படுகிறது. இப்பெண்ணின் தொடை பருத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது கரம் உடைந்துள்ளது. இடுப்பில் ஒட்டியாணம் அணி செய்கிறது. உயரம் 13 செ.மீ. அகலம் 10 செ.மீ. காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டாகும்.

## 2. சுடுமண் ஆண் உருவ தலைப்பகுதி

பூம்புகார் அருகேயுள்ள மணிக்கிராமத்தில் காப்பாட்சியர் கோ.முத்துசாமியால் கள ஆய்வின் போது சேகரிக்கப்பட்டதாகும். நெற்றியில் தடித்த கண்ணிமாலை காட்டப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் சிரசுசக்கரம் காணப்படுகிறது. தலையின் உட்புறம் கூடுபோன்று வெற்றிடமாகக் காட்டப்பட்டுள்ளது.

தலைப்பகுதி மட்டும் கனமாக உள்ளது புன்னகைத் தவழும் முகமாக உள்ளது. காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டாகும்.

## 3. சுடுமண் இறை உருவம்

பூம்புகார் தீப்பாய்ந்தாள் அம்மன் கோயிலின் தலத்தரு பூவரசு ஆகும். இதன் அடிப்பகுதியிலிருந்து கிடைத்ததாகும். இது ஆண் உருவமாகும். கைகள், கால்கள், உடைந்துள்ளன. தலையில் மகுடம் காட்டப்பட்டுள்ளது. உருண்டையான முகம், வடிந்து விழும் காதுகளில் பத்ரகுண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் மணிமாலை காணப்படுகிறது. அரச குடும்பத்தின் உருவமாகக் கம்பீரமாக காட்டப்பட்டுள்ளது. உயரம் 15 செ.மீ. அகலம் 8 செ.மீ. காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டாகும்.

## 4. முதுமக்கள் தாழியில் கிடைத்த தொல்பொருட்கள்

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கண்டியூர் என்ற ஊரில் முதுமக்கள் தாழியில் கிடைத்த அகல்விளக்கு, எலும்புத் துண்டுகள், கருப்பு-சிவப்பு நிறமுடைய கிண்ணம், கலயம் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவைகளை அன்பளிப்பாக அளித்தவர் திரு எம். சண்முகம், ஓய்வுப் பெற்ற உடற்கல்வி ஆசிரியராவார். இவைகளைக் கண்டறிந்து அங்கிருந்து காப்பாட்சியர் கோ. முத்துசாமி பெற்று வந்து காட்சிக்கு வைத்துள்ளார்.

## 5. காரைமேடு கருப்பு - சிவப்பு பானைகள்

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், காரைமேடு மணல்மேடு என்ற ஊரில் உப்பணாற்றின் கரையில் உள்ள

மணல்திடல் இடத்தில் முதுமக்கள் தாழியிலிருந்து கிடைத்த கருப்பு - சிவப்பு நிற ஓடுகள் கருவண்ணக் கலயம், குடுவை, கிண்ணம், உடைந்த இரும்பு குறுவாள், எலும்புத் துண்டுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டாகும். இவ்வூர் திரு. வி. வைத்தியலிங்கம், திரு.இரவி ஆகியோர் அகழ்வைப்பகத்திற்கு தகவல் அளித்ததன் பேரில் காப்பாட்சியர் கோ. முத்துசாமி அங்கு சென்று ஆய்வு செய்து தொல்பொருட்களைச் சேகரித்து வந்து இங்கு காட்சிக்கு வைத்துள்ளார்.

## 6. செங்கல்லில் அன்னப்பறவை

பூம்புகாரில் பல்லவனீஸ்வரம் பகுதியில் கிடைத்ததாகும். ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 18 செ.மீ. அகலம் 7 செ.மீ. உயரம் 11 செ.மீ. காலம் கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டு. முற்காலத்தில் திருக்கோயில்களில் பூதவரி மற்றும் யாளிவரி என்று சுவரின் மேலே பதிக்கப்பட்டன. அதேபோல் பெரிய மாளிகைகளின் சுவரின் மேலே அழகுக்காக, அன்னவரி என்ற அமைப்பை சங்ககால கட்டடக் கலையில் சிறப்பிடம் பெற்றது இதன்மூலம் அறிய முடிகிறது. இதனை கோ.அண்ணாதுரை என்பவரிடமிருந்து அகழ்வைப்பகத்திற்கு காப்பாட்சியர் வாங்கி வைத்துள்ளார்.

## 7. மண்ணீட்டாளர் வனைக்கருவி

பூம்புகார் அருகேயுள்ள மணிக்கிராமத்தில் கிடைத்ததாகும். கிழார்வெளியில் கிடைத்த ஜாடியின் மூடியும், கீழையூரில் கிடைத்த சுடுமண் அகல்விளக்கும், கிழார்வெளியைச் சேர்ந்த திருமதி. அம்சவல்லி என்பவரால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டவைகளாகும். காலம் கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டுகளாகும்.

## 8. சுடுமண் தொம்பை

பூம்புகாரில் கிடைத்ததாகும். திரு. இராமகிருஷ்ணன் என்பவர் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். தானியம் சேமித்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதாகும். நடுப்பகுதி அகன்றும், மேற்பகுதி, கீழ்ப்பகுதி குவிந்தும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உயரம் 74 செ.மீ, சுற்றளவு173 செ.மீ, 500 ஆண்டுகள் பழமையானதாகும். இது இரண்டு மூட்டை கொள்ளளவு உடையதாகும். 100 ஆண்டுகள் பழமையானது.

## 9. சீனதேசத்து சுடுமண் மது ஜாடி -1

பூம்புகாரில் சேகரிக்கப்பட்டதாகும். அகழ்வைப்பகத்திற்கு திருமதி. மல்லிகா அன்பளிப்பாக அளித்துள்ளார். மேற்புறத்தில் தூக்குவதற்கு வசதியாக கெட்டி மண்ணால் நான்கு கைப்பிடிகள் பதிக்கப்பட்டு உள்ளன. தடித்தும், மங்கிய சிவப்புக் கலரில் உள்ளது. உயரம் 53 செ.மீ, சுற்றளவு 132 செ.மீ, 200 ஆண்டுகள் பழமையானது.

## 10. சீனஜாடி - 2

பூம்புகாரில் கிடைத்ததாகும். வட்டவடிவாக உள்ளது. மேற் பகுதியின் ஒருபுறம் உடைந்துள்ளது. உயரம் 23 செ.மீ, சுற்றளவு 37 செ.மீ. காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும். 50 லிட்டர் கொள்ளளவு உடையது.

## 11. கடலில் கிடைத்த அரிய பானை ஒடு

பூம்புகாருக்கு கிழக்கே 3 கி.மீ. தொலைவில் கடலில் மீனவர் வலையில் கிடைத்ததாகும். பூம்புகார் மீனவர் காலனியைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவர்

அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். உடைந்த நிலையில் ஒரு பகுதி மட்டும் உள்ளது. பூக்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. சாம்பல் நிறத்தில் உள்ளது. கப்பல் பயணத்தின் போது உடைந்த இப்பானையின் பகுதியைக் கடலில் வீசி உள்ளனர். இதுவும் சீன தேசத்து ஓடு ஆகும். சூரியனின் உருவம் கீறளாகக் காட்டப்பட்டுள்ளது. உடைந்த மது ஜாடியின் இப்பகுதி கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

## 12. சுடுமண்ணாலான கெண்டிமூக்குகள்

சுடுமண்ணாலான கெண்டிமூக்குகள் பூம்புகாரின் பல பகுதிகளில் சேகரிக்கப்பட்டவைகளாகும். நீர் ஓடி வரும் பகுதி புஞ்சைத் திடல் பகுதிகளிலே இவை கிடைத்துள்ளன. இதைத் தனியாக செய்து கெண்டியுடன் பொருத்தப்பட்டிருக்கும். இதே மாதிரி கெண்டிமூக்குகள் இராஜேந்திரச்சோழன் காலத்தில் தலை நகராக இருந்த கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற அகழாய்விலும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவை சங்க காலம் முதல் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டுகள் வரை கிடைத்துள்ளன. குழந்தைகள், பால் மற்றும் நீர் அருந்துவதற்கு சுடுமண்ணாலான கெண்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெரிய வருகிறது.

## 13. சுடுமண் புனித நீர்க்குடுவை

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மேலப்பெரும்பள்ளம் என்ற ஊரில் சேகரிக்கப்பட்டதாகும். வட்ட வடிவில் மேலே கழுத்து சிறு வாயுடன் உள்ளது. நீர் வருவதற்கு சிறிய குழாய் அமைப்பு உள்ளது. உயரம் 12 செ.மீ. அகலம் 14 செ.மீ. ஆகும். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச்

சேர்ந்ததாகும். $1^1/_2$ லிட்டர் கொள்ளளவு உடையது. திரு. கோ. அண்ணாதுரை என்பவரிடமிருந்து காப்பாட்சியர் கோ.முத்துசாமியால் வாங்கி வந்து இங்கு காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது.

**மாக்கல் சட்டி**

பூம்புகார் பகுதியில் அமைந்த சத்திரக்குளம் அருகில் பூமிக்கு அடியில் கிடைத்ததாகும். இதை அன்பளிப்பாக அளித்தவர் பூம்புகார் ம.கணேசன் என்பவராவார். மாக்கல்லினால் செய்யப்பட்டதாகும். மேல் பகுதி அகன்றும், அடிப்பகுதி குவிந்தும் காணப்படுகிறது. மேல்பகுதியின் இருபுறங்களிலும் கைப்பிடிகள் உள்ளன. அகலம் 31 செ.மீ. சுற்றளவு 83 செ.மீ. உயரம் 11 செ.மீ. ஆகும். அடிப்பகுதி உடைந்து காணப்படுகிறது. 100 ஆண்டுகள் பழமையானதாகும். 5 லிட்டர் கொள்ளளவு உடையதாகும்.

**கல்லாக மாறிய கிளிஞ்சல்**

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தரங்கம் பாடியில் சேகரிக்கப்பட்டதாகும். அகழ்வைப்பகத்திற்கு பொறையார் திரு. தவசுமுத்துநாடார் குடும்பத்தினர் அன்பளிப்பாக அளித்துள்ளனர். இதன் நீளம் $62^1/_2$ செ.மீ. அகலம் $47^1/_2$ செ.மீ. கனம் $10^1/_2$ செ.மீ. ஆகும். 'டிரிக்ட்ரா' என்றழைக்கப்படும் கல்லாக மாறிய - பாசில் கிளிஞ்சலின் காலம் $2^1/_2$ கோடி ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இதன் எடை 20 கி.கி.

## சிலம்பு

அரிய உலோகத்தாலான சிலம்பு. சிலப்பதிகார நாயகி கண்ணகி காலத்தில் பெண்களால் அணியப்பெற்ற சிலம்பாகும். கொல்லம் கடற்கரையில் கிடைத்தது. அங்கு பாலம் கட்டுவதற்கு சென்ற பொறியாளர் திரு. தியாகராசன் என்பவர் கண்டெடுத்து வந்து பூம்புகார் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். இச்சிலம்பின் சுற்றளவு 50 செ.மீ. நீளம் $17^{1}/_{2}$ செ.மீ. அகலம் 14 செ.மீ. எடை 305 கிராம். சிலம்பின் முகப்பின் நடுவில் உயர்ந்த மேடாகவும், தலைப்பின் மேல் நான்கு இதழ்களுடைய மலர் போல அமைக்கப்பட்டுள்ளது. சுற்றி இரண்டு கோடுகள் வட்டமிட்டு அதன் நடுவில் பல புள்ளிகள் அமைக்கப் பெற்றுள்ளது. இதனைச் சுற்றி 25 சிறுசிறு வட்டவடிவங்கள் அமைக்கப்பெற்றுள்ளது. அதைச் சார்ந்து சிலம்பின் வளைவில் இருபுறமும் இதேபோல் பக்கத்திற்கு நான்காக எட்டு சிறு வடிவங்கள் அமைக்கப் பெற்றுள்ளது. அதைச் சார்ந்த சிலம்பின் வளைவில் இருபுறமும் இதேபோல பக்கத்திற்கு நான்காக எட்டு சிறு வடிவங்கள் அமைக்கப் பெற்றுள்ளது. உள்ளே பரல்கள் போடுவதற்கு ஏற்ற வகையில் கூடாக அமைந்துள்ளது. பரல்கள் உள்ளே இட்டு இணைத்தது போன்று காட்சி அளிக்கிறது. காலில் அணிவதற்கு ஏற்ற வகையில் வளைவான வடிவம் அமைக்கப் பெற்றுள்ளது. மென்மையான கனமற்ற உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. கீழே சின்ன சலங்கைகள் கட்டி தொங்கவிட மூன்று வளைவுகள் உள்ளன. கண்ணகி காலத்தில் அணிந்திருந்த சிலம்பு எப்படி அமைந்திருந்தது என்பதைச் சிலப்பதிகாரம்,

"மத்தக மணியொடு வயிரம் கட்டிய
பத்திக்கேவணப் பசும்பொன் குடைச்சூல்
சித்திரச்சிலம்பின் செய்வினை எல்லாம்"

என்று குறிக்கின்றது. சிலம்பின் முன்பகுதிகள் வைரம் வைத்துக் கட்டியது போன்று தோற்றப் பொலிவொடு சித்திரங்கள் வரையப்பெற்று, கைவினைக் கலைஞரின் கலைநுட்பம் வெளிப்படும் வகையில் சிலம்பின் அமைப்பு அமைந்துள்ளது.

# உறைக்கிணறுகள்

## நெய்தவாசலில் கிடைத்தவை

சுடுமண் உறைகள் பூம்புகார் அருகேயுள்ள நெய்தவாசல் என்ற ஊரில் கிடைத்ததாகும். இதை அளித்தவர் நெய்தவாசல் மா.சம்மந்தமூர்த்தி என்பவராவார். 5 அடுக்குகள் கொண்டது. ஒரு அடுக்கின் உயரம் 2 அடி, சுற்றளவு 179 செ.மீ. ஆகும். 1500 ஆண்டுகட்கு முற்பட்டதாகும். கெட்டியாகவும், நேர்த்தியாகவும் செய்து, சுட்டு பூமியில் புதைத்துள்ளனர். பூம்புகார், வானகிரி போன்ற இடங்களில் சங்ககால உறைக் கிணறுகள் கடற்கரை ஓரம் கிடைத்துள்ளன.

## பூம்புகாரில் கிடைத்தவை

சில உறைகள் பூம்புகார் கடற்கரை ஓரத்தில் கிடைத்ததாகும். உயரம் ஒரு அடி. சுற்றளவு 213 செ.மீ. இரண்டு அடுக்குகள் கொண்டது. கி.பி. 1-ஆம் நூற்றாண்டாகும். பூம்புகாரின் வரலாற்றைப் பற்றி கூறும் பட்டினப்பாலை

"உறை கிணற்றுப்-புறச்சேரி"

என்று குறிக்கின்றது. உறை என்பது வட்டமாக தொட்டி போல் குயவரால் செய்யப்பட்டுச் சூளையில் வைத்து சுட்டு எடுக்கப்பட்டதாகும். மண்ணால் செய்து சுடப்பட்ட இந்த உறைகளை பூமிக்கு அடியிலிருந்து மேல்மட்டம் வரையிலும் அடுக்கி கட்டப்பட்டிருக்கும் உறைகளுள் கிணறு அமைப்பதால் உறைக்கிணறுகள் என்று பெயர். இதனால் மாசற்ற குளிர்ந்த குடிநீர் சங்க காலத்திலேயே பூம்புகார் மக்கள் பயன்படுத்தியமை தெரிகிறது.

**சங்குகள்**

தமிழகத்தில் 2000 ஆண்டுகட்கு முன்பு பெண்கள் சங்கினால் செய்யப்பட்ட வளையல்களை அணிந்துள்ளனர். தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் உடைந்த சங்கு வளையல்கள், மூலப்பொருளாக அறுக்கப்பட்ட சங்கின் பகுதிகள் கிடைத்துள்ளன. தற்போதும் திருக்கோயில்களில் நன்மைக்காக சங்குகளினால் புனித நீர் அபிஷேகம் செய்யப்படுகிறது. எனவே, அணிகலன்களுக்கும், பூசைக்கும் அலங்காரத்திற்கும் முக்கியப் பொருளாக சங்கு விளங்குகிறது. வலம்புரி சங்கை வைத்திருந்தால் செல்வம் கொழிக்கும் என்று நம்பப்படுகிறது. இங்கு இரண்டு சங்குகளில் ஆங்கிலத்தில் எழுத்துகள் பொறிக்கப்பட்டு அலங்காரத்துடன் வடிவமைக்கப்பட்டு காட்சிக்கு வைக்க சேகரிக்கப்பட்டுள்ளன. இவைகள் அந்தமான் தீவிலிருந்து வரவழைக்கப்பட்டவை களாகும். அன்பளிப்பாக அளித்தவர் பொறையார் திரு. ரா. பி. வெள்ளையன் ஆவார். இச்சங்குகளில் ஆங்கில எழுத்துகளில் கோட்டையின் பெயர் உள்ளது. காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும்.

**மணிகள்**

பூம்புகாரிலிருந்து நவமணிகள் வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பூம்புகார் அருகிலுள்ள மணிக்கிராமம் என்ற ஊரில் மணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இங்கு மேற்கொண்ட அகழாய்வில் ஏராளமான துளையிடப்பட்ட கார்னீலியன், கிரைஸ்டல், பளிங்கு, பச்சை, வெள்ளை நிறமுடைய பல மணிகள் கிடைத்துள்ளன. இப்பகுதியில் துளையிடப்பட்ட மணிகளைச் சேகரித்து மணிமாலையாக மேலப்பெரும்பள்ளம்

புலவர் ந.தியாகராசன் அவர்கள் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். மணிமேகலையில் 'சலாகை நுழைந்த மணித்துளை யகவையின்' என உள்ளது. சிறு கம்பியால் மணிகள் துளையிடப்பட்டிருந்தது என்பதை மணிமேகலை காப்பியம் எடுத்து கூறுகின்றது.

## பீங்கான் பொருட்கள்

பூம்புகாரிலும், சுற்றியுள்ள ஊர்களிலும் சேகரிக்கப்பட்ட போர்சிலின் வகையைச் சேர்ந்த பீங்கான் பானைகள், வட்டவடிவான தட்டு, குடுவைகள், குளிர்பதன ஜாடி போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## வண்ணம் பூசிய சீன நாட்டு மது ஜாடி

இந்த ஜாடி பூம்புகாரின் சாய்காடு பகுதியில் கிடைத்ததாகும். ஜாடியின் மேற்பகுதி குவிந்தும், நடுப்பகுதி விரிந்தும், கீழ்ப்பகுதி குவிந்தும் காணப்படுகிறது. ஜாடியை தூக்குவதற்கு வசதியாக மேற்பகுதியில் நான்கு சுடுமண் கைப்பிடிகள் உள்ளன. இதன் உயரம் 66 செ.மீ. சுற்றளவு 150 செ.மீ. போர்சிலின் வகையைச் சேர்ந்ததாகும். இதன் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும்.

## சீனக் குடுவைகள்

இரண்டு சீனக் குடுவைகள் பூம்புகாரில் கிடைத்தவை. சிறியதாக அழகாக வடிக்கப்பட்டுள்ளன. ஒரு குடுவையின் சுற்றளவு 22 செ.மீ. மற்றொரு குடுவையின் சுற்றளவு 20 செ.மீ. கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டாகும்.

**சீனக் கலயம்**

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரத்தில் சேகரிக்கப்பட்டதாகும். கழுத்தில் மணிகள் போன்ற ஆபரணம் அழகு செய்யப்பட்டுள்ளது. வாய்ப்பகுதி குவிந்தும், நடுப்பகுதி விரிந்தும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பழுப்பு நிறத்தில் உள்ளது. வாய்ப்பகுதியின் சுற்றளவு 40 செ.மீ, நடுப்பகுதி சுற்றளவு 101 செ.மீ. ஆகும். போர்சிலின் வகையைச் சேர்ந்தது. இதன் காலம் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டாகும்.

**சீனத் தட்டு**

நீலக் கலரில் பூக்கள் வரையப் பெற்ற அலங்காரத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றப் பகுதிகள் வெள்ளைக் கலரில் உள்ளது. தரங்கம்பாடியில் சேகரிக்கப்பட்டதாகும். அகலம் 15 செ.மீ, சுற்றளவு 48 செ.மீ. காலம் கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டாகும்.

**சீனக்குடுவை (பெரியது)**

இக்குடுவை தரங்கம்பாடியில் கிடைத்ததாகும். கழுத்துப் பகுதி குவிந்தும், ஏனையப் பகுதிகள் வட்டவடிவாக உள்ளது. கழுத்துப் பகுதியில் கைப்பிடி உள்ளது. இதன் உயரம் 42 செ.மீ, சுற்றளவு 32 செ.மீ. காலம் 18-ஆம் நூற்றாண்டாகும்.

**இறக்குமதியான குளிர்பதன ஜாடி**

பூம்புகாரில் சேகரிக்கப்பட்டதாகும். லண்டனில் செய்யப் பட்டது. பூம்புகாரைச் சேர்ந்த மருத்துவர் திரு. கண்ணன் அவர்கள் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். இது இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்ததாகும். இதன் உயரம் 31 செ.மீ. சுற்றளவு 59 செ.மீ. காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

இதற்கு மேல்மூடி இல்லை. இதன் மேல் பகுதியில் ஒரு அறையும் கீழ்ப்பகுதியில் ஒரு அறையும் உள்ளன. குளிர்ந்த நீரை குடிக்க எடுப்பதற்கு கீழே ஒரு துவாரமும் உள்ளது.

சீன பீங்கான் ஓடுகள் தமிழகத்தில் பெரியபட்டினம், பழைய காயல், இராமேசுவரம், தேவிப்பட்டினம், நாகப்பட்டினம், தாராசுரம், கங்கைகொண்டசோழபுரம், வேலூர் கோட்டை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவை கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவை. ஆங்கிலேயர் காலத்தில் இவை மிகுந்த அளவில் பல இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மன் அரண்மனையில் இவை நிறைய கிடைத்துள்ளன.

# பண்டைய நாணயங்கள்

## சீன - ரோமானியக் காசுகள்

கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன - ரோமானியக் காசுகள் அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவைகள் பூம்புகாரில் சேகரிக்கப்பட்டவைகளாகும். சீன நாட்டு செப்பு நாணயங்கள் மூன்று உள்ளன. இந்நாணயங்களில் சீன எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. ரோமானிய நாணயங்கள் ஐந்து இடம் பெற்றுள்ளன. ரோமானிய நாட்டு நாணயங்களில் ரோம் நாட்டு அரசர்கள் உருவம் பொறிக்கப்பட்டுள்ளன. சீன, ரோம் நாட்டு நாணயங்களால் பூம்புகாரிலிருந்து அக்காலத்தில் இந்நாடுகளுடன் வாணிப தொடர்பு வைத்திருந்தது என்பது தெரிகிறது.

## தரங்கம்பாடி நாணயங்கள்

தரங்கம்பாடியில் சேகரிக்கப்பட்ட சோழர் காலத்து நாணயங்களும், நாயக்கர் காலத்து நாணயங்களும் காட்சிக்கு இங்கு வைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்து நாணயத்தில் முன் புறம் ஆண் உருவம் நின்ற நிலையிலும், பின்புறம் அமர்ந்த நிலையிலும் உள்ளது. நாயக்கர் காலத்து நாணயங்கள் நான்கும் அகழ்வைப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

## மான்கொம்பு

பூம்புகார் கிழார்வெளியில் அகழாய்வு மூலமாகச் சேகரிக்கப்பட்டதாகும். இரண்டு பகுதிகளாக உடைந்துள்ளது. நீளம் 11 செ.மீ. அகலம் 3 செ.மீ. காலம் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டாகும்.

## கப்பல் தேங்காய்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் சேகரிக்கப் பட்டதாகும். கப்பல் பயணத்தின் போது நீர் அருந்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. இரட்டை தேங்காய், ஒரே இணைப்பாகவும் அதன் ஓடும் உள்ளது. உயரம் 32 செ.மீ. அகலம் 36 செ.மீ. ஆகும். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும்.

## மருந்துபொடி சேமிக்கும் குடுவை

இது பேய் சுரக்காயின் கூடு ஆகும். அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக பூம்புகாரின் மருத்துவர் திரு.கண்ணன் அளித்துள்ளார். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும். இதன் உயரம் 10 செ.மீ. சுற்றளவு 26 செ.மீ. ஆகும்.

## மூக்கு பொடிக் குடுவை

மாட்டுக் கொம்பினால் ஆனது. திரு. எம். தட்சிணாமூர்த்தி, உடற்கல்வி ஆசிரியர் திருவெண்காடு அன்பளிப்பாக அளித்துள்ளார். இந்த குடுவையின் மூலம் பொடியை காரத்துடன் மூக்கினால் சுவாசிப்பதற்கு இது பயன்படுத்தப்பட்ட தாகும். உயரம் 7 செ.மீ. சுற்றளவு 10 செ.மீ. ஆகும். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும்.

# இரும்புப் பொருட்கள்

## கப்பல் பாகம்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், எருக்கட்டாஞ்சேரி என்ற ஊரில் சேகரிக்கப்பட்டதாகும். வட்ட வடிவில் உள்ளது. அகலம் வாய்ப்பகுதி 63 செ.மீ. கனம் 6 செ.மீ. காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

## நங்கூரம்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், எருக்கட்டாஞ்சேரியில் சேகரிக்கப்பட்டதாகும். இதன் மொத்த நீளம் 293 செ.மீ. கனம் 48 செ.மீ. காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

## ஓலைச் சுவடிகள்

தரங்கம்பாடியில் இவை சேகரிக்கப்பட்டதாகும். அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்தவர் திரு. கோவிந்தராசு ஆசிரியராவார். சித்த மருத்துவத்தைப் பற்றி தெரிவிக்கின்றது. இது 200 ஆண்டுகள் பழமையானது.

## கப்பல் தொழில்நுட்பம் குறித்த நூல்கள்

### நாவாய்சாத்திரம்

கி.பி. 1741-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓலைச்சுவடி நூலாகும். பாய்மரக்கப்பலின் வகைகள், அவைகளை செய்யும் விதம், கடலில் செலுத்தும் முறை போன்ற செய்திகளை இந்நூல் தருகின்றது. இந்நூலில் கப்பலைக் குறிக்க பல்வேறு சொற்கள் கையாளப்பட்டுள்ளன. நாவாய், ஊங்கம், கலம் ஏரா, தோனி, யாத்திரைமரம், படகு, ஓடம் என்பன. ஏராப் பருமல்,

தொகுதி, வங்கு, பாய்மரம், பாய் முதலியன கப்பலின் உறுப்புகள். இவை போன்ற கப்பல் தொடர்பான செய்திகளை இந்நூல் கொண்டதாகும். இந்நூல் அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## 2. கப்பல் சாத்திரம்

கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓலைச்சுவடிகளின் நூலாகும். இது தமிழ் ஓலைச்சுவடியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட ஆங்கில நூலாகும். இந்நூலை திருமதி. ஆர். கண்ணம்மாள் தலைமை ஆசிரியை, செம்மனார்கோயில் பெண்கள் மே.நி. பள்ளி, என்பவர் இந்த அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். மேலும் 12 அரிய நூல்கள் பல இடங்களில் கல்வெட்டாய்வாளர் கோ.முத்துசாமி சேகரித்து இங்கு காட்சிக்கு வைத்துள்ளார்.

## சிலப்பதிகாரக் கலைக்கூடம்

சிலப்பதிக்காரக் கலைக்கூடம் எழுநிலை மாடம் கொண்ட எழில் மிகுந்த கட்டிடத்தில் அமைந்துள்ளது. முதல் மாடம் 12 அடி உயரமும் அதன் மேலுள்ள ஒவ்வொரு மாடமும் 5 அடி உயரமும் ஏழாவது மாடிக்கு மேலுள்ள கலசப்பகுதி 8 அடி உயரமும் கொண்டுள்ளன. மொத்த உயரம் 50 அடிக்கு மேலாகும்.

எழுநிலை மாடத்திற்கு முன்பாக மகர தோரண வாயில் எடுப்பாகவும் வனப்பாகவும் காட்சி தருகின்றது. இதன் உயரம் 22. 5 அடியாகும். சுருளிமலை மங்கலதேவி கோயிலில் உள்ள மகர தோரணத்தை ஒத்து வடிவமைக்கப் பெற்றதாகும். கலைக்கூடத்தின் உட்புறம் திறந்த வெளிப்பகுதியில் சிலம்பு வடிவில் சிறுகுளம் ஒன்று அமைந்துள்ளது. இக்குளக்கரையில் $9^1/_2$ அடி உயரத்தில் கண்ணகியின் சிலையும் $8^1/_2$ அடி

உயரத்தில் மாதவியின் சிலையும் இடம் பெற்று எழிலுடன் திகழ்கின்றன. சிலம்பின் வரிகளுக்கு சிற்பக் கலை மூலம் வடிவம் தந்து பதித்து வைக்கப்பட்டுள்ள கலைப் பெட்டகம் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் கலைக்கூடம் உள்ளது.

## பூம்புகாரைச் சுற்றியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள்

பூம்புகாரைச் சுற்றியுள்ள ஆக்கூர், சாயாவனம், திருவெண்காடு, திருநாங்கூர், பல்லவனீச்சுரம், மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம், மணிக்கிராமம், தலச்சங்காடு ஆகிய ஊர்கள் வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகும்.

### ஆக்கூர்

தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது. இங்குள்ள திருத்தான்தோன்றிசுவரர் கோயில் ஒரு மாடக்கோயிலாகும். இதற்கு தான்தோன்றிமாடம் என்று பெயர். சைவ சமயக் குரவரான அப்பரடிகளால் தேவாரம் பாடல் பெற்றத் திருத்தலம். "இறைவன் ஆயிரத்தில் ஒருவர்" - என்று அழைக்கப்படுகிறார்.

### சாயாவனம்

பூம்புகாருக்கு மேற்கே மேலையூர் செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தொன்மையான திருச்சாயாவனேசுவரர் கோயில் எடுப்பிக்கப்பட்டுள்ள இடமே திருச்சாயாவனம் என்ற தலமாகும். கல்வெட்டுகள் இவ்வூரை "இராசாதிராச - வளநாட்டு, நாங்கூர்நாட்டு, காவிரிப்பூம் பட்டினத்து திருச்சாய்க்காடு" என்று குறிக்கிறது. கடலில் கிடைத்த வில்லேந்திய வேலவரின் செப்புத்திருமேனி இக்கோயிலில் காட்சி தருகிறது. சோழர் கலைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## திருவெண்காடு

சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு சுவேதாரண்யேசுவரரின் பெரிய கோயில் உள்ளது. மெய்கண்டார் பிறந்த ஊர் இதுவாகும். சமயக்குரவர் நால்வரும் வணங்கிய திருக்கோயிலாகும். பட்டினத்தாருக்கு இறைவன் இலிங்கத்தை அளித்த இடம் இதுவேயாகும். சங்ககால பழமைவாய்ந்தது. மூன்று திருக்குளங்கள் உள்ளன. நவக்கிரகங்களுள் இது புதன் தலமாகவும் உள்ளது. சோழ நாட்டில் முக்தி தரும் தலங்களில் இது முதலாவதாகும்.

## மணிக்கிராமம்

இவ்வூர் பூம்புகார் பேருந்து நிலையத்திலிருந்து வடமேற்கே 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இங்கு நடந்த அகழாய்வில் கருப்பு - சிவப்பு பானை ஓடுகள், கருப்பு நிற பானை ஓடுகள், ரோமானிய நாட்டு ரௌலட்டட் பானை ஓடுகள், கிடைத்துள்ளன. கல்வெட்டில் குறிக்கப்படும் நாங்கூர் என்ற ஊர் மிக அருகில் உள்ள ஊராகும். இக்கால கட்டத்தில் நாங்கூர் பெரியநகராக இருந்துள்ளது. இவ்வூரில் நவமணிகள் விற்கும் ஒரு வணிகக் குழு இருந்துள்ளது. "மணிக்கிராமத்தார்" என்று இக்குழுவினர் அழைக்கப்பட்டனர்.

## பல்லவனீச்சுரம்

பூம்புகாரிலிருந்து மேற்கே செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் - பல்லவனீச்சுரர். இறைவி-சௌந்தரநாயகி என்பதாகும். சிலப்பதிகார செம்மல்களான கோவலன், கண்ணகி பிறந்த இடமும் இதுவேயாகும்.

### மேலப்பெரும்பள்ளம்

இவ்வூர் தரங்கம்பாடி வட்டத்தில் உள்ளது. திருமால் இத்தலத்திலுள்ள இறைவனை வழிபட்டு சங்கு பெற்றதலமாகும். இங்குள்ள 'வட்டனைப்படநடந்த நாயகர்' செப்புத்திருமேனி உலகப் புகழ் பெற்ற ஒன்றாகும். கல்வெட்டு வரிகள், தேவாரப் பாடல் வரிகள், செம்புத் திருமேனி அமைப்பு இம் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பேசப்பட்டுள்ளது இந்த திருமேனியின் தனிச் சிறப்பாகும். அப்பரும், ஞானசம்பந்தரும் இங்கு தேவாரம் பாடியுள்ளனர்.

### நாங்கூர்

இவ்வூர் சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற 7-திருப்பதிகளும், இதைச் சுற்றி 6 திருப்பதிகளும் உள்ளன. வைணவர்களுக்கு இவ்வூர் முக்கியத் தலமாகத் திகழ்கின்றது. ஒரு காலத்தில் இவ்வூர் பூம்புகார் நாட்டுக்கே தலைநகராகவும் இருந்துள்ளது. 'இராசாதிராச வளநாட்டு, நாங்கூர் நாட்டு, சாயாவனம்' என்று சாயாவனம் கல் வெட்டு மூலம் அறிந்து கொள்ளலாம். சோழமன்னன் பரகேசரி வர்மனின் இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு இங்கு எழுந் தருளியுள்ள இறைவனை 'திருமணிமாடக்கோயில் பெருமாள்' என்று குறிக்கிறது. இங்கு ஆண்டுதோறும் தை அமாவாசை மறு நாள் "11 கருடசேவை" எனும் பெருவிழா நடைபெறுவது வைணவ உலகில் சிறப்பு அம்சமாகும். நாட்டின் பல இடங்களில் இருந்தும் வைணவப் பக்தர்கள் இங்கு வந்து தங்கி வழிபாடு செய்து செல்வது வழக்கமாக உள்ளது.

சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானுக்கு, "நாங்கூர் வேளிர்" இன மக்கள் பெண் கொடுத்து உறவு முறை வைத்துக் கொண்டனர் என்பதும் தெரிகிறது.

## தலச்சங்காடு

இது சங்க கால பழமை வாய்ந்த ஊர். 108 வைணவத் தலங்களுள் ஒன்றான நாண்மதியப் பெருமாள் கோயில் இங்கு உள்ளது. சோழர் கால சிவன் கோயில் 10-அடி உயரத்தில் மாடக் கோயிலாகக் கட்டப்பட்டுள்ளது. பராந்தக சோழன் காலத்துக் கற்கோயிலின் அடிப்பகுதி கல்வெட்டுடன் இவ்வூர் நடுநிலைப் பள்ளியின் விளையாட்டுத் திடலில் புதைந்துள்ளது. சிலப்பதி காரத்தில் கூறப்படும் மாடல மறையோன் இவ்வூரில்தான் வாழ்ந்துள்ளான். இவ்வூர் புஞ்சைத் திடல்களில் சங்க காலத் தடயங்கள் தற்போதும் கிடைத்து கொண்டு வருகின்றன. முற்காலத்தில் பூந்தோட்டம் இவ்வூரில் இருந்தமையால் தலச்சங்காடு -என்ற பெயர் ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிகிறது.

## பூம்புகார் அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள வரலாற்று நூல்கள்


1. சிலம்பு - திரு.இராஜசேகரன் - தாளாளர் மே.சீ.மேல் நிலைப் பள்ளி - மேலையூர்.
2. காவிரிப்பூம்பட்டினம் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்- வெளியீடு மாதவி மன்றம் - பூம்புகார் - 1939.
3. கப்பல் சாத்திரம் - அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியீடு - 1950.
4. நாவாய் சாத்திரம் - டாக்டர் எஸ். சௌந்திரபாண்டியன்- அரசு கீழ்த்திசை சுவடிகள் நூலக வெளியீடு - 1995.
5. மறைந்த மாநகர் பூம்புகார் - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு - 1997.
6. பூம்புகார் - ஆசிரியர் நால்வர் - தொல்லியல் துறை வெளியீடு.
7. கண்ணகி மண்ணில் திருமதி. டாக்டர் தாயம்மாள் அறவாணன்- தமிழ்ப் பேராசிரியர் - சென்னை - 2003.
8. கடல் கொண்ட காவியம், வரலாற்று நாவல் - திருமதி. இரா.மலர்விழி- கல்வித்துறை - மயிலாடுதுறை, மே- 2006.
9. பூம்புகாரும் கடல் அகழாய்வும் முன்னாள் தொல்லியல் துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன்.
10. தொன்மைப் பூம்புகாரில் காவல் தெய்வம் சாம்பாபதி கோயில் - திருமதி. இரா.மலர்விழி கண்காணிப்பாளர்- மயிலாடுதுறை - கல்வித்துறை, 2007.
11. பூம்புகாரில் வரலாற்று எச்சங்கள் - புலவர் திரு. ந. தியாகராசன் - மேலப்பெரும்பள்ளம் - 1973
12. கல்வெட்டு காலாண்டு இதழ்கள் : 3.



ஓலைச் சுவடிகள் - மருத்துவம்,
300 ஆண்டுகள் பழமையானது



செங்கல்லில் அன்னப்பறவை, பூம்புகார்
கி.பி. 6-ஆம் நூற்றாண்டு



சீனநாட்டு வண்ணம் பூசிய மதுசாடி, சாயாவனம் - பூம்புகார்
கி.பி.17-ஆம் நூற்றாண்டு



திருநீற்று மாடம், தருமகுளம் - பூம்புகார்
200 ஆண்டுகள் - பழமையானது



புத்தர், சின்னமேடு கடலில் கிடைத்தது
கி.பி. 2-ஆம் நூற்றாண்டு



சதுக்கபூதம் காவல் தெய்வம் சாயாவனம் பூம்புகார்
கி.பி. 2-ஆம் நூற்றாண்டு



**அய்யனார் - சிற்பம்**
கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு
மேலப் பெரும்பள்ளம்



**டிரிக்ட்ரா என்றழைக்கப்படும் கல்லாக மாறிய கிளிஞ்சல் $2^{1}/_{2}$ கோடி ஆண்டுகட்கு முற்பட்டது**



**உலோகத்தாலான சிலம்பு அணி**
கி.பி. 2-ஆம் நூற்றாண்டு
கேரள மாநிலம், கொல்லம் கடலில் கிடைத்தது



**தாய் தெய்வ உருவங்கள்**
கி.பி. 4-ஆம் நூற்றாண்டு
வீராலிமேடு - மேலப்பெரும்பள்ளம்




W:BLACKETT